Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

# Feminism in *Ainkurunooru*

**Dr. K. Sindhu,** Department of Tamil, Associate Professor, PSG College of Arts and Science, Coimbatore – 641014.
ORCiD: https://orcid.org//0009-0003-4398-9517
**DOI: 10.5281/zenodo.11191843**

## Abstract

*Sangha literary songs are the storehouse that clearly conveys to us the noble culture and civilized morality of Palantamizhar. The Sangha texts are a painting depicting the life, culture and customs of the people of the Sangha period. Ideologies are the ideals that are formed based on religion, customs, politics, culture, family, relationships, beliefs etc. constructed in the society. These are given primacy in the literature. For example, Sangha literary songs contain concepts such as punarchi, existence, division, udal, and mourning. Conceptualization involves taking a new concept in mind and generally creating an explanation and definition for it. Based on this concept, this method is to explain the characteristics of female languages in aingurunuru.*

**Keywords:** Conception, Feminine Language, *Ainkurunooru.*

## References

[1] V. T. Ramasubramaniam. *Ainkurunooru Padalum Uraiyum*. Thirumagal Nilayam, Chennai – 600 017.
[2] Somasundaranar P.V., *Ainkurunooru*. Tirunelveli South Indian Saiva Siddhanta Publication Society, Ltd., Tirunelveli – 6.
[3] Thiruvalluvar. *Thirukkural.* Parimelazhaka Text, Saiva Siddhanta Noolpadippuk Kazhagam, Chennai, 1977.
[4] *Tolkappiyam. Ilampuranar Urai, Nachinarkiniyar Urai, Senavariyar Urai.* Kazhaga Padippu, Chennai.
[5] Manickam.V.S.P. *Tamilkadal*. Manivasakar Publishing House, Chidambaram.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License

Academic Research News
*Peer-Reviewed Journal*

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

# ஐங்குறுநூற்றில் பெண்ணியம்

**முனைவர் கு. சிந்து,** தமிழ்த்துறை, இணைப் பேராசிரியர்,
பூ.சா.கோகலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் – 641014.
ORCiD: https://orcid.org//0009-0003-4398-9517
**DOI: 10.5281/zenodo.11191843**

**ஆய்வுச்சுருக்கம்**

*பழந்தமிழர் தம் விழுமியப் பண்பாட்டினையும் நாகரீக ஒழுக்கத்தினையும் உள்ளவாறு தெள்ளத் தெளிவாக நமக்கு உணர்த்தும் களஞ்சியமாகத் திகழ்பவை சங்க இலக்கியப் பாடல்களே ஆகும். சங்க நூல்கள் சங்ககால மக்களின் வாழ்வியல், பண்பாடு ஒழுகலாறுகளைப் படம்பிடித்துக் காட்டும் ஓவியமாகத் திகழ்கின்றன. சமூகத்தில் கட்டமைக்கப்பட்ட மதம், பழக்கவழக்கங்கள், அரசியல், பண்பாடு, குடும்பம், உறவுமுறை, நம்பிக்கைகள் போன்றவற்றின் அடிப்படையில் தோற்றம் பெற்ற பொருண்மைகளே கருத்தமைவுகளாக விளங்குகின்றன. இவற்றிற்கு இலக்கியத்தில் முதன்மை அளிக்கப்படுகிறது. சான்றாக சங்க இலக்கியப் பாடல்களில் புணர்ச்சி, இருத்தல், பிரிவு, ஊடல், இரங்கல் போன்ற கருத்துகள் இடம் பெற்றுள்ளன. புதிய கருத்தொன்றை மனதில் கொண்டு அதற்கான விளக்கத்தையும் வரையறையையும் பொதுவாக உருவாக்கும் நிலையில் கருத்தாக்கம் முகிழ்கின்றது. இக்கருத்தாக்க அடிப்படையில் பெண்மொழிகளின் பண்பை ஐங்குறுநூற்றுப் பாடல் வழி விளக்குவதே இவ்வாய்வாகும்.*

**இலக்கியக்கரு**

எந்த ஒரு கருத்து எழுதப்பட்டாலும், பேசப்பட்டாலும் அதற்கு கரு ஒன்று தேவை. எளிய கருத்துருக்களுக்கு அடிப்படைக் கரு எதுவேண்டுமாயினும் இருக்கலாம். ஆனால் இலக்கியக் கருத்துகளை விளக்கும் கரு வலுவுடையதாக அமைய வேண்டும். எளிய கருத்துகளைக் கூறும்போது அவை சுவையாக அமையவேண்டுமென்பதில்லை. ஆனால் இலக்கியக் கருத்துகள் மனத்தைக் கவரக்கூடியதாகவும், சுவையாகவும் அமையவேண்டும். இலக்கியக் கருத்துகளைக் கூறி மக்களின் மனத்தைக் கவரவும், மகிழ்ச்சிபடுத்தவும் வேண்டுமெனில் அதற்கெனத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற கரு மிகமிக வலுவுடையதாக இருக்கவேண்டும். இலக்கியத்தில் முழுஅமைப்பிற்கும் அடிப்படையாக அமைவது கருவேயாகும். கருவைத் தேர்ந்தெடுப்பதில் குறை ஏற்பட்டால் இலக்கிய அமைப்பையும் அதனால் ஏற்பட வேண்டிய நற்பயனையும் அது பாதிக்கக் கூடும்.

படைப்பிலக்கியவாதிகளுக்குக் கருவைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கொடுப்பதினால் தன் மனத்திற்குகந்த கருவைத் தேர்ந்தெடுத்து இலக்கியக் கட்டுக்கோப்புக்குள்ளடக்கும் படைப்பையும் அவர்களால் தரமுடியும் என அறிஞர் சிலர் எண்ணக்கூடும் வடமொழி

வல்லுநர்கள் இது குறித்து கூறுவதாவது, **“பலருக்கு அறிமுகமான கதைகளிலிருந்து தன் காப்பியக் கருத்தை அமைத்துக் கொள்வதே சிறப்புடையது” (டாக்டர் சுந்தரமூர்த்தி, பண்டைத்தமிழிலக்கிய கொள்கைகள், பக் -19)** என்று படைப்பிலக்கியவாதிகளுக்கு அவர்கள் கூறுகின்றனர்.

எழுத்தாளர்கள் சொந்தமாகக் கதையைக் கற்பனை செய்து கொள்ளலாம். ஆனால் படைப்பாளருக்குத் தனித்திறமை இருந்தாலொழிய சொந்தக் கதையமைப்பு சிறப்பாக அமைய முடியாது. ஆகவே பலருக்கு அறிமுகமான புகழ் பெற்ற கதைக்கருவைத் தேர்ந்தெடுப்பதே சாலச் சிறந்ததாகும். **“ஒன்றுக்கொன்று தொடர்புடைய சிந்தனைகளையும் பொருள்களையும் நிகழ்ச்சிகளையும், உணர்ச்சிகளையும் கொண்டதாக இலக்கியக்கரு அமைந்திருக்க வேண்டும் என்று வ.சு.ப.மாணிக்கம் குறிப்பிடுகின்றார்”(வ.சு.பமாணிக்கம், தமிழ்க்காதல்பக்-161)**

**தலைவியின் செயல்**

தலைவியானவள் தலைவன் தனக்கு எவ்வளவு துன்பம் இழைத்தாலும் அதை மறந்து தலைவனை ஏற்றுக்கொள்ளும் தன்மையுடையவளாகவே காணப்படுகிறாள். இதனைத் தொல்காப்பியர்,

**கற்பும் காமமும் நற்பாலொழுக்கமும்**
**மெல்லியல் பொறையும் நிறைவும் வல்லிதின்**
**விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள் (தொல்காப்பியம்கற்பியல்நூற்-11)**

என்று குறிப்பிடுகின்றார்.

**தலைவியின் அன்புள்ளம்**

தலைவியிடம் களவொழுக்கம் புரிந்த தலைவன் தலைவியை மணம் செய்து கொள்ளாமல் காலம் தாழ்த்துகிறான். இத்தகைய தாழ்வான குணமுடைய தலைவனை மறந்துவிடுமாறு தோழி கூறுகின்றாள் அதற்குத் தலைவி,

**எக்கர் ஞாழல் இறங்கிணர்ப் படுசினைப்**
**புள்ளிறை கூரும் துறைவனை**
**உள்ளேன் தோழி! படீஇயர் என்கண்ணே ஐங்குறுநூறு – 142)**

அதாவது மணல்மேட்டில் உள்ள ஞாழல் மரத்தின் தாழ்வான கிளைகளிலுள்ள பூங்கொத்துக்களிடையே கடற்பறவைகள் தங்கும் நெய்தல் துறையுடைய தலைவனை நினைக்கமாட்டேன் என்று தலைவி கூறுவது தலைவன் தனக்கு எவ்வளவு துன்பம் இழைத்தாலும் அவனை நினைக்காதிருக்க முடியாது என்னும் பொருளைத் தருவதாக அமைகிறது. இதன்மூலம் தலைவியின் உயர்வான உள்ளம் புலப்படுகிறது. மேலும், புறவொழுக்கத்தில் தோய்ந்த தலைவன் மீண்டும் தலைவியை நாடுகின்றான். அப்போது தலைவி தலைவனை ஏற்க மறுக்கிறாள்.

**வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தெனக்**

**காணிய சென்ற மடநடை நாரை**
**மிதிப்ப நக்க கண்போல் நெய்தல்**
**கட்கமழ்ந்து ஆனாத் துறைவற்கு**
**நெக்க நெஞ்சம் நேர்கல்லேனே (ஐங்குறுநூறு – 151)**

நாரையானது நறுமணம் கமழும் நெய்தல் மலரில் உள்ள தேனை நுகர இயலாமையால் அந்த மலரை மிதித்து அழித்தல் போன்று தலைவியின் கற்பொழுக்கமும், இல்லறப்பாங்காகிய விருந்தோம்பல், தெய்வம் போற்றல் முதலியவை தலைவனின் பிரிவால் செய்ய இயலாமையை எண்ணி தலைவி வருந்துகின்றாள். அதாவது தலைவனது புறத்தொழுக்கத்தால் இல்லறக் கடமைகளைச் சரிவர செய்ய இயலவில்லை என்பதே இப்பாடலின் கருத்தாகும்.

**நோய்க்கு மருந்தான தலைவி**

தலைவியானவள் இனிமையான பேச்சு உடையவள் தான் செய்யும தவறினைப் பொறுத்துக் கொள்ளும் இயல்புடையவள். நாட்டின் மீது மிகுந்த அக்கறைக் கொண்டவள் எனத் தலைவன் தலைவியின் செயல்பாடுகளைப் போற்றிப் புகழ்கின்றான்.

**அலங்கிதழ் நெய்தற் கொற்கை முன்துறை**
**இலங்குமுத் துஉறைக்கும் எயிறு கெழுதுவர்வாய்**
**அரம்போழ் அவ்வளைக் குறுமகள்**
**நாம்பார்த்தன்ன தீங்கிள வியனே (ஐங்குறுநூறு – 185)**

அதாவது நெய்தல் மலர்கள் நிறைந்த கொற்கை நகரில் நிறைந்து விளங்கும் முத்துபோல் பற்கள் உடையவளும், சிவந்த வாய் இதழ் உடையவளும் அரத்தால் அழகு செய்யப்பட்ட அழகிய வளையல்கள் அணிந்தவளும், இளம் பருவத்தினளும், யாழின் நரம்பினையொத்த இனியசொல் பேசுபவளும் ஆகியவள் என் தலைவியாவாள் எனத் தலைவன் தலைவியைப் போற்றிப் புகழ்கின்றான்.

ஒருத்தியை மணம் செய்து இல்லறவாழ்வை நடத்தும் தலைவன் பின்னரும் வேறு ஒருத்தியை மணம்செய்து கொண்டு மனையிடத்தே வந்து சேர முதலில் மணம் கொண்ட மனைவி, தலைவனின் இரண்டாவது மனைவியை வரவேற்கின்றாள் என்பது மிகவும் அரிதான செயலாகும். ஆனாலும் தலைவியானவள் இரண்டாவது மனைவியை வரவேற்றுக் கொள்வதன் மூலம் அவளின் உயர்ந்த உள்ளத்தின் சிறப்பினை வெளிப்படுத்துகிறது.

**மயில்கள் ஆலப்பெருந்தேன் இமிரத்**
**தண்மழை தலைஇய மாமலைநாட**
**நின்னினும் சிறந்தனள் எமக்கே நீநயந்து**
**நன்மனை அருங்கடி அயர**
**எந்நலஞ் சிறப்ப யாம் இனிப்பெற்றோளே (ஐங்குறுநூறு – 292)**

அதாவது மலைநாட்டின் தலைவனே நீ விரும்பி நல்லமனைக்கண் மணம் கொண்டு மனைவியாக்கப் பெற்று அழைத்து வந்த நங்கையானவள் நின்னைக் காட்டிலும் எனக்குச்

சிறந்தவள் எனத் தலைவி கூறுவதன் வாயிலாக அவளின் சிறப்பியல்பானது புலப்படுகிறது. இவ்வாறு தலைவன் தன் கூற்று வாயிலாகத் தலைவியின் தனிச்சிறப்பினை எடுத்துரைக்கின்றான்.

**தலைவியின் சமுதாயச் சிந்தனை**

தோழியானவள் தலைவிக்கு எல்லாவிதத்திலும் உதவி செய்பவளாகவும் அவள் பெரிதும் துன்புறும்போது அவளுக்கு ஆறுதல் கூறுபவளாகவும், தலைவியின் நலனில் பெரிதும் அக்கறைக் கொண்டவளாகவும் காணப்படுகிறாள். அத்தகைய தோழி தலைவியின் செயல்களைப் பெரிதும வியந்துப் போற்றுகின்றாள். தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று மீண்டும் திரும்பிய நிலையில் தான் பிரிந்து சென்ற காலத்து தலைவியின் நிலை எத்தன்மைத்தாய் அமைந்திருந்தது என வினவ தோழி கூறியது. தலைவன் மனைக் கண் இருந்து இல்லறப்பணியைச் செய்யாவிடினும் தலைவி அத்தகைய அறத்தில் குறையாதவளாய் இல்லறம் பேணி நல்லறச் செயல்களைப் புரிந்தனள் என்று தோழி தலைவியின் சிறப்பியல்புகளை எடுத்துரைக்கின்றாள்.

**விளைக வயலே வருக இரவலர் (ஐங்குறுநூறு – 2)**
**பால்பல ஊறுக பகடு சிறக்க (ஐங்குறுநூறு – 3)**
**பசியில லாகுக! பிணிசேண் நீங்குக (ஐங்குறுநூறு – 5)**

என்றும் நாட்டு மக்களும், மன்னனும் நீடுழி வாழவேண்டும் நாடு வளம்பெற வேண்டும் என்று நாட்டுப்பற்றுடைய தலைவியின் உள்ள உயர்வினைத் தோழி தலைவனிடம் வியந்து கூறினாள். இதன்மூலம் தலைவியின் உலகப் பொது நோக்குத் தன்மை வெளிப்படுகிறது. உலகில் பசியில்லாத தன்மையும், நோயற்ற வாழ்வும் நாடிய தன்மையும் தலைவியின் செயல்பாடுகள் வாயிலாக உணர்த்தப்பட்டுள்ளது. இத்தன்மையில்,

**உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்**
**சேராது இயல்வது நாடு"(திருக்குறள் – 734)**

என்ற வள்ளுவரின் கருத்தானது தலைவியின் செயல்பாடுகளோடு பொருந்துவதாக அமைந்துள்ளது.

**தலைவியின் அன்புள்ளத்தை பரத்தை புகழ்தல்**

சங்க இலக்கியங்களில் பரத்தமையொழுக்கம் குறித்த செய்திகள் அதிக அளவில் சுட்டப்படுகின்றன. "பரத்தையர் யாவரெனின் ஆடலும் பாடலும் வல்லவராகி அழகும் இளமையும் காட்டி, இன்பமும், பொருளும் வெஃகி ஒருவர் மாட்டும் தங்காதார்"42 என்பார். தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணார். இத்தகைய பரத்தையானவள் தலைவியின் சிறப்பினைத் தன் கூற்றின் வாயிலாக வெளிப்படுத்துகிறாள். தலைவன் உரிமையுடைய தலைவியோடு கூடிக் கடலாடுதலைக் கண்ட பரத்தை தலைவியானவள் சிறுகுழந்தை போன்ற தன்மையுடையவள். அதாவது மணல்பாவை அழிந்ததற்கே வருந்திய தலைவி

இல்லறவாழ்விற்குக் கேடு விளைவிக்கும் தலைவனின் புறவொழுக்கத்தை கேள்விப்பட்டால் தாங்கிக் கொள்ளமாட்டாள் எனப் பரத்தை தலைவனிடம் கூறுகின்றாள்.

**தெண்திரை பாவை வௌவ**

**உண்கண் சிவப்ப அழுதுநின்றோளே (ஐங்குறுநூறு – 97)**

அதாவது தலைவியானவள் இளமையுடைய பெதும்பைப் பெண்ணாதலால் சூதுவாது அறியாத் தன்மையுடையவள் என்ற கருத்தானது வெளிப்படுகிறது.

**கருப்பொருள் அடிப்படையில் தலைவியின் செயலினைப் புலப்படுத்துதல்**

கருப்பொருள் அடிப்படையில் தலைவியின் சிறப்பானது வெளிப்படுத்தப்படுகிறது. புறத்தொழுக்கத்தில் நெடுநாள் தங்கிய தலைவனை தலைவி ஏற்று உபசரிக்கிறாள். அப்போது தலைவன் தலைவியின் அழகினை வியந்து போற்றுகின்றான்.

**பொய்கை ஊரன் மகள் இவள்**

**பொய்கைப் பூவினும் நறுந்ண்ணியளே (ஐங்குறுநூறு – 300)**

பொய்கைகள் விளங்கும் ஊரனின் மகளாகிய தலைவி பொய்கையில் பூக்கும் ஆம்பல் மலரினும் மிகவும் நறுமணமும் குளிர்ச்சியும் உடையவள் என்ற கருத்தானது தலைவியின் சிறப்பினை எடுத்துரைக்கிறது. தலைவியின் சிறப்பினையும் அழகினையும் மயிலோடு ஒப்பிட்டுக் கூறும் தன்மை இங்குச் சுட்டப்பட்டுள்ளது.

**கொடிச்சி கூந்தல் போலத்தோகை**

**அஞ்சிறை விரிக்கும் பெருங்கல் வெற்பன்**

**வந்தனன் எதிர்ந்தனர் கொடையே**

**அந்தீங்கிளவி பொலிக நின்சிறப்பே (ஐங்குறுநூறு –92)**

இப்பாடலில் தலைவியின் கூந்தலைப் போன்று மயில் தனது அழகிய இறகுகளை விரித்தாடும் தன்மை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும்,

**நன்னுதல் நாறும் முல்லைமலர**

**நின்னே போல மாமருண்டு நோக்க**

**நின்னே உள்ளி வந்தனென் (ஐங்குறுநூறு – 203)**

அதாவது தலைவன் காட்டிடையே வரும்போது கண்ட முல்லைமலர், மான், மயில், மேகம் ஆகியவற்றைக் கண்டபோது தலைவியின் தோற்றமே புலப்பட்டது என்ற கருத்தின் வாயிலாகத் தலைவியின் சிறப்பியல்பு புலனாகிறது.

**தலைவனின் ஊர்சிறப்பினை வியத்தல்**

தலைவனும், தலைவியும் களவொழுக்கத்தில் மகிழ்ந்த பின்னர்த் தலைவி தலைவனோடு உடன்போக்கு நிகழ்த்தினாள். தலைவனுடைய ஊரை அடைந்து மணம் கொண்ட தலைவி பின்னர் தன் தாயார் மனையை அடைந்தனள். அங்கு தோழியரிடம் தலைவனின் நாட்டுச் சிறப்பினைக் கூறி மகிழ்கிறாள் தலைவி.

**தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு**

**உவலை கூவற்கீழ்**

**மான் உண்டு எஞ்சிய கலிழிநீரே (ஐங்குறுநூறு – 238)**

அதாவது நமது தோட்டத்திலிருந்து கிடைத்த தேனைக் காட்டிலும் தலைவனது நாட்டில் உள்ள நீர்நிலையில் தழைகள் கலந்து கிடக்க மான் முதலிய விலங்குகள் உண்டு எஞ்சிக் கலங்கியநீர் இனிமையுடையது என்று தலைவி கூறுவதன் மூலம் காதல் சிறப்பினைக் காட்டிலும் இல்லற வாழ்க்கையின் சிறப்பு பெரிதாகப் போற்றப்படும் தன்மையானது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**தோழியின் செயல்கள்**

தலைவியின் நலனைப் பெரிதும் விரும்புபவளாகத் தோழி காணப்படுகிறாள். தலைவி தலைவன்மீது கொண்டிருக்கும் காதலின் தூய்மையினைப் புரிந்து கொண்டு விரைவில் தலைவிக்கு மணம் நடத்தும் பொருட்டு அதற்கான செயலில் ஈடுபடுகிறாள். மேலும், கற்புநிலையிலும் தலைவிக்குப் பலவித உதவிகள் தோழி செய்து கொடுக்கிறாள். தலைவி நலனைப் பேணுபவள்: தலைவன் களவொழுக்கத்தில் கூடி மகிழ்ந்து நெடுநாள் திருமணம் செய்து கொள்ளாமல் காலம் நீட்டிக்கிறான். இதனால் கவலையுற்ற தலைவி உடல்மெலிந்து அழகிழந்து காணப்படுகிறாள். ஆகவே தலைவன் விரைந்து தலைவியை வரைந்து கொள்ளுதல் வேண்டும் எனத் தோழி தலைவனிடம் கூறுகிறாள். தலைவனை நேரில் காணும்போது தலைவியின் மனம் மகிழ இனிய தோற்றம் உடையவளாகக் காணப்பட்டாள். தலைவன், களவொழுக்கத்தில் கூடி மகிழ்ந்து பிரிந்து சென்றபின்பு அவள் சோர்வுற்று மெலிவுறுகின்றாள் என்று கூறித் தோழி தலைவனிடம் விரைவில் தலைவியை வரைவு கொள்ளுமாறு வேண்டுகிறாள்.

**மாஅல் அருவித் தன்பெருஞ் சிலம்ப**

**நீ இவண் வரூஉங் காலை**

**மேவரு மாதோ இவள் நலனே தெய்யோ (ஐங்குறுநூறு –262)**

என்ற பாடலானது பெரிய அருவிகளையுடைய மலைநாட்டுத் தலைவனே நீ இங்கு வரும்போது தலைவியும் பேரழகு கொள்கின்றாள். நீ அவளைப் பிரிந்து சென்றாலோ மெலிவு கொள்கிறாள் என்று தோழி தலைவியின் பிரிவுத்துயரைத் தலைவனிடம் எடுத்துரைக்கின்றாள்.

தலைவியின்பால் களவொழுக்கத்தை விரும்பிய தலைவன் மணம் செய்துகொள்ளாமல் காலம் நீட்டித்தமையால் தலைவி உடல்மெலிந்து, உள்ளம் வருந்துகின்றாள். இதனால் தோழி மிகவும் வருந்துகின்றாள்.

**சிறுதினை மேய்ந்த தறுகண் பன்றி**

**அறுகல் அடுக்கத்துத் துணையொடு வதியும்**

**இலங்குமலை நாடன் வருஉம்**

**மருந்தும் அறியும்கொல் தோழி அவன் விருப்பே (ஐங்குறுநூறு – 200)**

அஞ்சாமையுடைய பன்றியானது சிறிய தினையை மேய்ந்து கருங்கற்கள் நிரம்பிய மலைப்புறத்துத்தன் துணையோடு கூடித்தங்கும் மலைநாட்டினையுடைய தலைவன் தான்

Volume 1, SPL 1, April 2024 E-ISSN – 2584-167X

விரும்பும் தலைவியை மணம் கொள்ளாமல் இருப்பது ஏனோ என்று தோழி கூறி வருந்துவதன் மூலம் அவள் தலைவியின் மீது அன்பு கொண்டுள்ள தன்மையினைப் புரிந்து கொள்ள முடிகிறது. இத்தன்மையினை வள்ளுவர்.

**பிணிக்கு மருந்து பிறமன் அணி இழை**
**தன்நோய்க்குத் தானே மருந்து (திருக்குறள் - 1102)**

என்ற குறள் மூலம் தெளிவுப்படுத்துகிறார்.

**துயரம் நீக்கும் அருமருந்து**

தலைவன் பரத்தையிற்பிரிவு, தூதிற்பிரிவு, பொருள்; வயிற்பிரிவு போன்ற காரணங்களினால் பிரிந்து செல்லும் சூழ்நிலையில் தலைவியானவள் மிகுந்த துன்பத்திற்கு ஆளாகிறாள். இவ்வாறு பிரிவுத் துயரால் துன்புற்று வருந்தும் தலைவியின் நிலை கண்ட தோழி தலைவன் விரைவில் வருவான் என்று பல ஆறுதல் வார்த்தைகள் கூறி அவளைத் தேற்றுகிறாள். அப்போது தலைவி சிறிது மனநிம்மதி அடைகிறாள். இதுவும் தோழியின் செயல்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. தலைவனின் பிரிவினால் உடல்மெலிந்து அழகிழந்து காணப்பட்ட தலைவியை மகிழ்விக்கும் பொருட்டு தோழி

**இலங்கு வீங்கு எல்வளை ஆய்நுதல் கவினப்**
**பொலந்தேர் கொண்கன் வந்தனன் இனியே**
**விலங்கு அரி நெடுங்கண் நெகிழ்மதி**
**நலங்கவர் பசலையை நகுகம் நாமே" (ஐங்குறுநூறு – 200)**

செறிந்த வளையலையுடையவளே, உன்னுடைய எழில்மேவும் நெற்றியானது எழில் மேவும் வகையில் பொன்னாலான தேரினையுடைய தலைவன் நின்னை உடன் கொண்டு போக மனைப்புறத்தே வந்தனன். ஆகவே உன்கண்களைத் திறந்து துயில் நீங்குக. உன் நலத்தைக் கவரும் பசலையும் இனி அகன்று நீங்கியது என்று தோழி தலைவிக்கு ஆறுதல் கூறி அவளை மகிழ்விப்பதன் மூலம் தோழியின் அன்புள்ளமானது புலப்படுகிறது.

**தோழியின் தனித்தன்மைகள்**

தலைவிக்கு எல்லாவகையிலும் உறுதுணையாக இருக்கும் தோழி அவள் விரும்பிய தலைவனையே அவளுக்கு தலைவிக்கு மணம்முடித்துக் கொடுக்கும்படி செவிலித்தாயிடம் கூறுவது மட்டுமல்லாமல் களவொழுக்கத்தில் நெடுநாள் தங்கிய தலைவன் விரைவில் திருமணம் செய்யும் முயற்சியிலும் தோழி ஈடுபடுகிறாள். மேலும் தலைவனும், தலைவியும் திருமணம் செய்து கொண்ட இடத்து சிறப்பியல்புகளைக் கொண்ட தலைவியை வருத்தும் வகையில் அவளைப் பிரியாதும் வன்மையுறாதும் இருப்பாயாக (ஐங்.149) என்று தோழி கூறுவதன் மூலம் அவளின் தனித்தன்மை புலப்படுகிறது. களவொழுக்கத்தில் இருந்த தலைவன் தலைவியை வரைவிடைவைத்துப் பிரிந்து சென்று பலநாட்களாகியும் திரும்பவில்லை அதனால் தலைவி வருந்திய நிலையில் தோழியும் கவலையடைகிறாள். பின்னர் தலைவன் தலைவியை வரைவு கொள்ளும் வகையில் வருதலை அறிந்த தோழி பெருமகிழ்ச்சியடைகிறாள்.

Volume 1, SPL 1, April 2024 E-ISSN – 2584-167X

**புன்னை நுண்தாது உறைத்தரு நெய்தல்**
**பொன்படு மணியின் பொற்பத் தோன்றும்**
**மெல்லம் புலம்பன் வந்தென**
**நல்ல வாயின தோழி என் கண்ணே (ஐங்குறுநூறு – 189)**

என்ற பாடல் அடிகள் மூலம் புன்னைமரத்தின் நுண்மையான மகரந்தத்தூள் விளங்கும் நெய்தல்மலர்கள் பொன்னிடைப்பட்ட நீலமணிகள் போன்று அழகுடன் காணப்படும் மென்மையுடைய கடற்கரைத் தலைவன் வரைவின் காரணமாக வந்தான் என்று தோழி கூறுவதன் மூலமாகத் தோழியின் செயல்பாடுகள் அனைத்தும் தலைவியை மகிழ்விக்கும் விதமாகவே அமைந்துள்ளன என்பதை அறிய முடிகிறது.

**செவிலித்தாயின் செயல்கள்**

அகவையில் மூத்தவள் அறிவால் முதிர்ந்தவள் செவிலி ஆவாள். இவளே பெண்ணைப் பெற்று வளர்த்து பெருமைபெறும் தாய்மையின் முழுவடிவம் அரசர் குடியில் பிறக்கும் பிள்ளைகளைப் பேணி, அறிவுரைகள் கூறி வளர்ப்பதற்கு ஒரு பெண்ணினை நியமிப்பர். பெற்றதாயினும் குழந்தைகளைக் கவனிப்பதில் அக்கறை கொண்டவள் செவிலி,
நச்சினார்க்கினியர் இதனை,

**தாயரெனப் பன்மைக்கூறி தாமேயெனப்**
**பிரித்தனாற் சேரிக்கு நற்றாய் சேறலும்**
**சுரத்திற்கு செவிலித்தாய் சேறலும் புலனெறி**
**வழக்கத்திற்கு சிறந்ததென்றுணர்க (தொல்காப்பியம், நூற் 12)**

என்கிறார். தொல்காப்பியர் செவிலித்தாயினை,

**ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்திய**
**தாயெனப்படுவாள் செவிலியாகும் (தொல்காப்பியம், நூற் 122)**

எனக் குறிப்பிடுகிறார். உடன் போக்கில் தன்னை விட்டுச் சென்ற தலைவியை எண்ணிச் செவிலித்தாய் வருந்துகிறாள்.

**செவிலி தன்நெஞ்சிற்குக் கூறியது**

தலைவி உடன்போக்கில் சென்றபோது அவளைக் காணாத பெற்றோர் தலைவியைத் தேடி பல இடங்கில் செல்கின்றனர். ஆனால் தலைவியைக் காணமுடியாமல் திரும்புகின்றனர். இதனைக் கண்ட செவிலித்தாய் தலைவியின் பிரிவினை எண்ணி வருந்துகிறாள்.

**இது என் பாவைக்கு இனிய நன்பாவை**
**அலம்வரு நோக்கின் நலம்வரு சுடர்நுதல் (ஐங்குறுநூறு – 375)**

என்ற பாடல் அடிகள் மூலம் உடன்போக்கில் சென்ற தலைவி விளையாடிய பாவையைக் கண்டு வருந்துவதாக அமைந்துள்ளது. அதாவது தலைவியானவள் சிறுபிள்ளைத்தனம் கொண்டவள் அவள் விளையாடியப் பாவையைக் கண்டு மனம் வருந்துகிறாள்.

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

மேலும் தலைவி தன் காதலனோடு உடன்போக்கு நிகழ்த்தினமையைக் கண்டு மனம் வருந்திய செவிலித்தாய் அவளுக்கு உரிய காலத்தில் மணம் நிகழ்த்தாமல் காலம் தாழ்த்தியமையே காரணம் என நினைக்கிறாள். பெயரளவில் மட்டுமே தான் தாயாக இருக்கும் நிலையை எண்ணி வருந்துகிறாள்.

**அத்த நீள் இடை அவனொடு போகிய**
**முத்து ஏர் வெண்பல் முகிழ்நகைமடவரல் (ஐங்குறுநூறு – 380)**

என்ற பாடல் அடிகள் வாயிலாக கொடுமையான சுரத்தினைக் கடந்து எவ்வாறு தலைவி சென்றனளோ எனச் செவிலித் தாய் வருந்துவதன் மூலமாக தலைவியின் மீது செவிலித்தாய் கொண்டுள்ள அன்புள்ளமானது புலப்படுகிறது.

**மனைக்கு விளக்காகும் மனைவி**

தன்னுடைய மகள் சிறப்பாக இல்லறம் நடத்தும் சிறப்பினைக் காண விரும்பிய செவிலித்தாய் தலைவியின் ஊருக்குச் சென்று தலைவி அழகாக குடும்பம் நடத்தும் பாங்கினைக் கண்டு மனமகிழ்ச்சி அடைகின்றாள். தான் கண்ட இன்பக் காட்சியை நற்றாயிடம் கூறி மகிழ்கிறாள். இதனை,

**புதல்வன் நடுவன் ஆக நன்றும்**
**இனிது மன்ற அவர் கிடக்கை முனிவின்றி**
**நீலநிற வியலகம் கவைஇய**
**ஈனும் உம்பரும் பெறல் அருங்குரைத்தே (ஐங்குறுநூறு – 401)**

என்ற பாடலானது கன்றினை இடையில் கிடத்தி ஆண்மானும், பெண்மானும் அதனை இருபக்கத்திலும் அணைத்துள்ளதைப் போல தலைவியும் தன்னுடையப் புதல்வனை இடையில் கிடத்தி இருபுறத்திலும் தானும் தன்கணவனும் இருந்து மகிழ்ந்திருக்கும் காட்சியானது மிகவும் இனிமையாக இருந்தது எனத் தலைவி இல்லறம் பேணும் தன்மையினைச் செவிலி நற்றாயிடம் கூறி மகிழ்கிறாள். இத்தன்மையினை வள்ளுவர்,

**மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனை மாட்சித் தாயினும் இல் (திருக்குறள் - 52)**

என்ற குறள் மூலம் இல்வாழ்க்கையின் சிறப்பினை எடுத்துரைக்கின்றார்.

**ஒண்சுடர் பாண்டிற் செஞ்சுடர் போல**
**மனைக்கு விளக்கு ஆயினள் (ஐங்குறுநூறு – 405)**

என்ற பாடல் அடிகளானது தலைவியானவள் விளக்குத்தண்டில் விளங்கச் சுடர்விட்டு எரியும்பேரொளிபோல் மனைக்கண் விளங்கினாள் என்று செவிலித்தாய் நற்றாயிடம் கூறுகிறாள். இதன் மூலம் செவிலித்தாயின் அன்பின் வெளிப்பாடு தெளிவாகிறது.

**நற்றாயின் செயல்கள்**

தலைவியைப் பெற்றெடுத்த பெருமைக்குரியவள் நற்றாயாவாள். இவள் தலைவியின் அனைத்து நலனிலும் மிகுந்த அக்கறை கொண்டவள் தன் மகளின் மணமானது தன்

விருப்பப்படியே நடக்க வேண்டும் என்பதில் மிகுந்த கவனமாகச் செயல்படுவாள் நற்றாய். ஆனால் அவளது எண்ணத்திற்கு மாறாகத் தலைவி செயல்படும்போது நற்றாய் மனதளவில் பெரிதும் வருந்துகிறாள். தன்மனக் கவலைகளைச் செவிலித்தாயிடம் கூறி ஆறுதல் அடைகிறாள்.

**நற்றாயின் பாச உணர்வு**

களவொழுக்கத்தில் தலைவனொடு மகிழ்ந்த தலைவி அவனொடு உடன்போக்கு நிகழ்த்தினாள். அதனால் மனம் கலங்கிய நற்றாய் செவிலித்தாயிடம் மனம் வருந்திப் பின்வருமாறு கூறுகிறாள்.

**தெறுவது அம்மநும் மகள் விருப்பே**

**உறுதுயர் ;அவலமொடு உயிர்செலச்சாயப் (ஐங்குறுநூறு – 313)**

அதாவது தலைவியின் இந்தச் செயலானது நமக்குத் துன்பத்தை உண்டாக்கியது. உயிர் விலகிச் செல்லும் அளவுக்கு நெஞ்சமானது துயர்கொண்டு கலங்குகின்றது. அன்புமகள் நாட்டின் இடையில் உள்ள காட்டுப்பகுதியைக் கடந்து சென்றுவிட்டாள் என்று நற்றாய் செவிலித்தாயிடம் கூறி வருந்துகிறாள்.

**நற்றாய் தன் நெஞ்சிற்குக் கூறியது**

களவொழுக்கத்தில் தலைவனொடு கூடி மகிழ்ந்த தலைவி இரவுப்பொழுதில் யாரும் அறியாது உடன்போக்கு நிகழ்த்தினாள். அத்தகைய களவொழுக்கத்தை அறியாத நற்றாய் ஏக்கமும், சினமும் மிகுந்து பின்னர் நெஞ்சிற்கு ஆறுதல் கூறுகிறாள்.

**மள்ளர் கொட்டின் மஞ்ஞை ஆலும்**

**உயர் நெடும் குன்றம் படுமழை தலைஇச்**

**சுரநனி இனிய ஆகுக தில்ல (ஐங்குறுநூறு – 371)**

**நெஞ்சுணத் தேற்றிய வஞ்சினக் காளையொடு**

**அழுகல்மூதூர் அலர் எழச்**

**செழும்பல் குன்றம் இறந்த என்மகளே (ஐங்குறுநூறு – 372**

என்ற பாடல் அடிகள் தலைவி தலைவனோடு உடன்போக்கு நிகழ்த்திய வகையில் அவளைப் பெற்ற நற்றாய் பெரிதும் பிரிவுத் துன்பத்தால் வருந்தினாள். மேலும் தன்மகள் தன்னுடைய கூந்தலைத் தானே முடித்துக் கொள்ளுதற்கும் இயலாத சிறுவயது உடையவள் (374) என்று தலைவியின் இளமையான பருவநிலையை எண்ணி தன் நெஞ்சிற்குக் கூறுகிறாள்.

**விதியை எண்ணி வருந்துதல்**

தலைவி தன் காதலனோடு உடன்போக்கு சென்றதால் அவளை அவ்வாறு தூண்டிய விதியின் கொடுமையை எண்ணி நற்றாய் வருந்திக் கூறியதாவது,

**நல்வினை நெடுநகர் கல்லெனக் கலங்கப்**

**பூப்புரை உண்கண் மடவரல்**

**போக்கிய புணர்ந்த அறன் இயல்பாலே (ஐங்குறுநூறு – 376)**

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

நன்மையுடைய செயற்பாடு விளங்கும் பெரிய மனையில் உள்ளவர்கள் யாவரும் கலங்கிக் கண்ணீர் சொரிந்து புலம்பும்படி கொடிய விதியானது தலைவியைத் தலைவனோடு உடன் போகச் செய்தது. அறப்பண்பு இல்லாத அக்கொடிய விதியானது நாள்தோறும் என்னைக் கலங்கி அழச்செய்தது என நற்றாய் விதியை எண்ணி வருந்துகிறாள்.

**பரத்தையின் செயல்கள்**

பரத்தையானவள் தலைவிக்கு எதிரியாகவும், தலைவனுக்கு இன்பம் தருபவளாகவும் காணப்படுகிறாள். தலைவி எப்பொழுதும் பரத்தையைக் குற்றம் சொல்பவளாகவே காணப்படுகிறாள். இதனால் மனம் வருந்திய பரத்தை தனக்குத் தலைவியைப் போன்ற உரிமை தலைவன்மீது இல்லை என உணர்கிறாள். இதனை,

**குருகுடைத்துண்ட வெள்ளகட்டியாமை**
**அரிப்பறை வினைஞர் அலகு மிசைக் கூட்டும்**
**மலரணி வாயிற் பொய்கையூர்" (ஐங்குறுநூறு – 81)**

நாரைகள் உண்டு எஞ்சிய ஆமையின் இறைச்சியை அரிப்பறை முழக்கும் உழவர்கள் தமது உணவோடு சேர்த்து உண்பது போல தலைவனின் நலனை தான் விரும்பி நுகர்ந்த பின்னரே தலைவி நுகர்வாள் எனப் பரத்தை தன் உரிமையை நிலைநாட்டுகின்றாள்.

**அறிவுறுத்துதல்**

அறிவுறுத்துதல் என்பது பிறரை நல்வழிப்படுத்தும் வகையில் பல நல்ல கருத்துகளைக் கூறி அவர்களைத் தீயவழியில் செல்லாமல் இருக்க உதவுவதாகும்.

**தலைவி அறிவுறுத்துதல்**

களவொழுக்கத்தில் நெடுநாள் தங்கிய தலைவன் தலைவியை மணம் செய்யாமல் காலம் நீட்டித்தபோது மன வேதனையடைந்த தலைவி அவன் காதில் கேட்குமாறு சில செய்திகளைக் கூறுகிறாள்.

**சூழ்கழி மருங்கில் நாணிரை கொளீஇச்**
**சினைக்கயல் மாய்க்கும் துறைவன் கேண்மை**
**பிரிந்தும் வாழ்த்துமோ நாமே (ஐங்குறுநூறு – 111)**

என்ற பாடலானது பாண்மகன் கழிகள் சூழ்ந்த இடத்தில் தூண்டில் கயிற்றில் இரையை மாட்டி அதனைப்பற்ற வரும் சினையுடைய பருத்த மீனைக் கொல்லும் துறையுடைய தலைவனின் உறவைப் பிரிந்து தன்னால் உயிர்வாழ முடியாது என்று தலைவி கூறுவதன் வாயிலாக தலைவனை விரைவில் மணம் முடிக்க வேண்டும் என அறிவுறுத்தும் வகையில் அமைந்துள்ளது. மேலும் தலைவன் மணம் செய்து கொள்வதை நீட்டித்த நிலையில் தலைவன் கேட்குமாறு ஊரார்; அவனுக்கு மனைவியாயினார் என உரைத்தது பழிச்சொல்லாகும் என்று கூறுகிறாள்.(11)இரவுக் குறியில் தலைவியை நாடி வரும் தலைவனின் செயலைக் கண்ட தலைவி மாலைப் பொழுது கொடியது என்று கூறுவதன் வாயிலாக பகற்குறி, இரவுக்குறி என்று

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

அமையாது வரைவு கொண்டு தலைவன் தலைவியைத் தன்னூருக்கு அழைத்து செல்லுதலே ஏற்புடையது எனத் தலைவி தலைவனுக்கு அறிவுறுத்துகிறாள்.

**தோழி அறிவுறுத்துதல்**

தோழியானவள் தலைவனுக்குப் பலவழிகளில் அறிவுரை கூறி அவனை நல்வழிப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுகிறாள். மேலும் நெடுநாள் களவொழுக்கத்தில் நீடித்திருக்கும் தலைவன், தலைவியை விரைவில் திருமணம் செய்து கொள்ளும் பொருட்டு நற்கருத்துகளைக் கூறி தலைவனைத் தெளிவுபடுத்துகிறாள். களவொழுக்கத்தில் நீடிக்கும் தலைவன் கற்புவாழ்க்கை வாழ்வதற்கு உறுதுணையாக இருப்பவள் தோழியே ஆவாள். களவொழுக்கத்தில் இருந்த தலைவி மணம் செய்து கொண்டு கற்பு வாழ்க்கை வாழ விரும்பினாள். ஆனால் தலைவனோ களவொழுக்கத்தை நீட்டித்தான். இதனை அறிந்த தோழி தலைவனிடம்.

**கடற்கோடு அறுத்த அரம்போழ் அவ்வளை**
**ஒண்தொடி மடவறல் கண்டிகும் கொண்க (ஐங்குறுநூறு – 194)**

என்ற பாடலானது தலைவன் களவொழுக்கத்தில் கூடி மகிழ்வது பழிச்சொல்லுக்கு ஆட்படுத்தும.; ஆகையால் வரைவினை விரைவில் செய்தல் வேண்டும் என தோழி தலைவனுக்கு அறிவுறுத்துகிறாள்.

பரத்தையர் பலரை நாடிச்சென்ற தலைவனின் போற்றா ஒழுக்கத்தை அறிந்த தோழி வாயிலாக வந்த தலைவனிடம் இனியாவது தவறான ஒழுக்கத்தை விட்டு விலகும்படியாக அவனுக்கு அறிவுரை கூறுகின்றாள். அதாவது,

**தீம்பெரும் பொய்கையாமை இளம்பார்ப்புத்**
**தாய்முகம் நோக்கி வளந்திசினா அங்கு**
**அதுவே ஐயநின் மார்பே**
**அறிந்தனை ஒழுகுமதி அறனுமார் அதுவே (ஐங்குறுநூறு – 44)**

பெரிய பொய்கையில் உள்ள ஆமையின் முகம் நோக்கி வாழும் அதன் இளம் பார்ப்புகள் போன்று நின்மார்பையே நோக்கி வாழ்பவள் தலைவி. ஆனால் நீயே போற்றா ஒழுக்கத்தால் பரத்தையரிடமே பலகாலம் கழித்துள்ளாய் என்று தோழி தலைவனை இடித்துரைக்கிறாள்.

**தொகுப்புரை**

இலக்கியப் படைப்பின் உயிராக விளங்கும் கருத்தும், கருத்தியல் சார்ந்த சிந்தனைகளும் அகஅமைப்பாக விளக்கப்படுகின்றன.பெண்மாந்தர்களின் செயல்பாடுகள் வாயிலாக அவர்களின் வாழ்வியல் தன்மையினை அறிந்து கொள்ள முடிகிறது.அறிவுறுத்துதல் என்பது பிறரை நல்வழிப்படுத்தும் வகையில் பல நல்ல கருத்துக்களைக் கூறி வழிநடத்துதல். இந்நிலைப்பாடு ஐங்குறுநூற்றில் இடம்பெறும் தோழி கூற்றுப்பாடல்களில் மிக அதிக அளவில் காணப்படுகின்றன.புலவர் தன் கருத்துகளையும், எண்ணங்களையும் கதை மாந்தர் வாயிலாக அறிவிக்கும் விதத்தில் விளித்தல் அமைந்துள்ளது.பிறர் கருத்திற்கோ, செயல்பாட்டிற்கோ

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

உடன்படாத நிலை மறுத்தல். இதில் தலைவனின் போற்றா ஒழுக்கம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.ஐங்குறுநூற்றில் இடம் பெற்ற கருத்தியல் கூறுகளின் வாயிலாகப் பண்டைத் தமிழரின் பண்பாட்டியல் கூறுகளையும், வாழ்வியல் ஒழுகலாறுகளையும் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

**துணைநின்றநூல்கள்**

[1] வ.த.இராமசுப்பிரமணியம். ஐங்குறுநூறு பாடலும் உரையும். திருமகள் நிலையம், சென்னை – 600 017.

[2] சோமசுந்தரனார் பொ.வே., ஐங்குறுநூறு. திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், திருநெல்வேலி – 6.

[3] திருவள்ளுவர். திருக்குறள், பரிமேலழகர் உரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1977.

[4] தொல்காப்பியம். இளம்பூரணர் உரை, நச்சினார்க்கினியர் உரை, சேனாவரையர் உரை கழகப்பதிப்பு, சென்னை.

[5] மாணிக்கம்.வ.சு.ப. தமிழ்க்காதல், மணிவாசகர் பதிப்பகம்,சிதம்பரம்.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.